**சார்பு நீதிமன்றம், பெரியகுளம்.**
முன்னிலை: திரு.K.மாரியப்பன், பி.ஏ., பி.எல்.,
சார்பு நீதிபதி, பெரியகுளம்.

2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13 ஆம் நாள் புதன்கிழமை.

CNR.No.TNTHOA 0000042023
**அசல் வழக்கு எண்.06/2023**

பெரியகுளம் கிளை, கனரா பேங்க், அதன் மேலாளர் அவர்கள் மூலம்.
... வாதி

// எதிர் //

1. ப்ரீத்தி
2. செல்வம் ... பிரதிவாதிகள்

-----

இவ்வழக்கானது 07.01.2023 ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 13.09.2023 ஆம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபொழுது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.ராமகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், 2ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.ஆதிஸ்வரன் அவர்கள் ஆஜராகியும் மேலும் பிரதிவாதிகளை அழைத்தும் ஆஜராகததால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டு, வாதி தரப்பு சாட்சியம் விசாரிக்கப்பட்டு மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, வாதி தரப்பு வாதுரை கேட்கப்பட்டு, இன்று இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும்...

**தீர்ப்புரை**

**1.** வாதி வங்கிக்கு, பிரதிவாதிகள் தாவா தொகை ரூ.4,14,352/-யும் அதில் அசல் தொகை ரூ.98,000/-க்கு பிராது தேதி முதல் தீர்ப்பு தேதி வரை 9.95% வட்டியும், இவ்வழக்கின் செலவுத் தொகையும் சேர்த்து செலுத்தி வைக்கும்படி கேட்டு வாதி வங்கியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வாதி தரப்பு வழக்குரைச் சுருக்கம்:**

1ம் மற்றும் 2 ஆம் பிரதிவாதிகள் வாதி வங்கியை அணுகி 14.09.2007 ஆம் தேதி கல்வி

கடன் பெறுவதற்காக கல்வி கடன் விண்ணப்பம் ஒன்றை வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்துள்ளார்கள். 26.09.2007 ஆம் தேதியில் கல்வி கடன் ஒப்பந்தம் ஆவணம் ஒன்றை எழுதிக்கொடுத்துள்ளார்கள் அதன் அடிப்படையில் வாதி வங்கியானது 26.09.2007 ஆம் தேதி கல்வி கடனாக ரூ.98,000/- யை 1ம் பிரதிவாதி வங்கி கணக்கிற்கு வழங்கியது என்றும் மேலும் 1ம் பிரதிவாதி கல்வி கடனுக்கு அவரது தந்தையான 2ம் பிரதிவாதி ஜாமீன்தாரராக கையொப்பம் செய்துள்ளார். மேற்படி கல்வி கடன் வட்டி தொகைக்கு 11.50% வட்டி செலுத்துவதாக ஒப்புக் கொண்டுள்ளனர். பின்னர் பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு கடந்த 25.03.2010, 19.09.2012, 09.02.2015, 02.02.2018 &28.01.2021 ம் தேதியில் கடன் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் எழுதிக்கொடுத்துள்ளனர் என்றும் பினனர் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதியானவர் கல்லூரி படிப்பை முடித்து நல்ல நிலையில் உள்ளதாகவும் இவ் வழக்கின் பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டபடி வங்கிக்கிளையில் கடன் தவணைகளை செலுத்தவில்லை என்றும் வாதி வங்கி பலமுறை பிரதிவாதிகளை கடன் தவணைகளை செலுத்தும்படி கேட்டு தொடர்ந்து துயர்ந்து வந்தும், பிரதிவாதிகள் யாதொரு தொகையும் செலுத்தவில்லை வங்கி கிளையின் மூலம் கடந்த 27.07.2022ம் தேதி பிரதிவாதிகளுக்கு கடன் தவணைகளை செலுத்தும்படி கேட்டு அறிவிப்பு அனுப்பியதாகவும் மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்ட பிரதிவாதிகள் யாதொரு தொகையும் வங்கிகிளைக்கு திருப்பிச் செலுத்தாமல் இருந்து வருகிறார்கள். வங்கிக் கணக்கின்படி பிரதிவாதிகள் தாவா கடன் ரூ.4,14,352/-ஐ திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளது. எனவே, பிரதிவாதிகளிடமிருந்து கல்வி கடன் தொகையை வசூலிக்க வாதி வங்கியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜராகததாலும் எந்த வித எடுத்துரைப்பும் இல்லாததாலும் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டு, பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

**4.** இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டபோது வாதி தரப்பில் வங்கியின் முதன்மை மேலாளர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.01 முதல் வா.சா.ஆ.06 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5. தற்போது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்:**

வாதி வங்கி வழக்குரையில் கோரியுள்ளபடி தாவா தொகையை பிரதிவாதிகளிமிருந்து திரும்ப பெற உரிமையுடையவரா ? என்பதேயாகும்.

**6.** 1ம் மற்றும் 2 ஆம் பிரதிவாதிகள் வாதி வங்கியை அணுகி 14.09.2007 ஆம் தேதி கல்வி கடன் பெறுவதற்காக கல்வி கடன் விண்ணப்பம் ஒன்றை வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்துள்ளார்கள் அது வா.சா.ஆ.1 சான்றாவணம் மூலம் தெரியவருகிறது. 26.09.2007 ஆம் தேதியில் கல்வி கடன் ஒப்பந்தம் ஆவணம் ஒன்றை பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்துள்ளார்கள் அதனை வா.சா.ஆ.2. சான்றாவணங்கள் மூலம் தெளிவாக தெரிய வருகிறது. பின்னர் பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு கடந்த 25.03.2010, 19.09.2012, 09.02.2015, 02.02.2018 &28.01.2021 ம் தேதியில் கடன் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் எழுதிக்கொடுத்துள்ளனர் அது வா.சா.ஆ.4 மூலம் தெரியவருகிறது. கடந்த 27.07.2022ம் தேதி பிரதிவாதிகளுக்கு கடன் தவணைகளை செலுத்தும்படி கேட்டு அறிவிப்பு அனுப்பியும் மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்ட பிரதிவாதிகள் யாதொரு தொகையும் வங்கிகிளைக்கு திருப்பிச் செலுத்தாமல் இருப்பது 1ம் பிரதிவாதியின் கணக்கு பட்டியல் அறிக்கை மூலம் அறிய முடிகிறது அது வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 சான்றாவணங்கள் மூலம் தெளிவாக தெரியவருகிறது. தற்போது பிரதிவாதிகள் ரூ.4,14,352/-ஐ வாதி வங்கிக்கு வட்டியுடன் திருப்பி செலுத்த வேண்டியுள்ளது. எனவே, வாதி பிரதிவாதிகளிடமிருந்து தாவா தொகையை வட்டியுடன் திரும்ப பெற உரிமையுடையவர் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**7.** முடிவாக, வாதியின் வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, வாதிக்கு பிரதிவாதிகள் தாவா தொகை ரூ.4,14,352/-யும் அதில் அசல் தொகை ரூ.98,000/-க்கு

பிராது தேதி முதல் தொகை முழுவதும் வசூலாகும் தேதி வரை 6% பின்வட்டியும் சேர்த்து செலுத்த வேண்டுமென்று தீர்ப்பளிக்கிறது.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழைநீக்கம் செய்யப்பட்ட பின் 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13 ஆம் நாள் புதன்கிழமை இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

<u>வாதி தரப்பு சாட்சி:</u>

வா.சா.1 - சுனில்ராஜ் (வங்கியின் மேலாளர்).

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:</u>

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | வா.சா.ஆ.1 | 14.09.2007 ஆம் தேதியிட்ட வாதி வங்கிக்கு, பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த கல்வி கடன் விண்ணப்ப சான்று. | - | அசல் |
| 2. | வா.சா.ஆ.2 | 26.09.2007 ஆம் தேதியிட்ட வாதி வங்கிக்கு, பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த கல்வி கடன் ஒப்பந்த கடிதம். | - | அசல் |
| 3. | வா.சா.ஆ.3 | 26.09.2007 ஆம் தேதியிட்ட கல்வி கடன் அனுமதி கடிதம் | - | அசல் |
| 4. | வா.சா.ஆ.4 | 25.03.2010, 19.09.2012, 09.02.2015, 02.02.2018 28.01.2021 ம் தேதிகளில் பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த கடன் உயிர்ப்பிப்பு கடிதங்கள் | - | அசல் |
| 5. | வா.சா.ஆ.5 | 27.07.2022 ஆம் தேதியிட்ட பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு | - | அசல் |
| 7. | வா.சா.ஆ.6 | 01.01.2010 முதல் 24.11.2022 ஆம் தேதியிட்ட 1 ம் பிரதிவாதியின் கடன் கணக்கு பட்டியல் அறிக்கை | - | கணினி நகல் |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u> இல்லை.

(ஒம்.K.மாரியப்பன்,பி.ஏ,பி.எல்,)
சார்பு நீதிபதி,
பெரியகுளம்.